# வாழ்க்கைக்கு வழிகாட்டும் கலித்தொகை

*முனைவர் மு. சாந்தினி*
உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்.

மலர்: 4

இதழ்: 2

மாதம்: அக்டோபர்

வருடம்: 2019

ISSN: 2454-3993

## முன்னுரை

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட மனித வாழ்க்கை மிகவும் குறுகிய காலகட்டத்தை உடையது. எப்படி வாழவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதற்குள் ஆயுள் முடிந்து விடும். பெரியோர்களின் அனுபவ மொழியான நல்ல நூல்கள் என்றும் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவை. சங்கத் தமிழரின் வாழ்வியலைத் தெளிவாக உணர்த்தும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த புறநூல்களில் மட்டுமல்ல, காதலுக்கு முக்கியத்துவம் கொடுத்த அகநூல்களில்கூட தமிழரின் விழுமியங்கள் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஐந்திணை மக்களின் வாழ்வியலைக் கூறும் கலித்தொகையில் இடம்பெறும் அறக்கருத்துக்களைக் காண்போம்.

## கலித்தொகையின் அமைப்பு

கலித்தொகைப் பாடல்கள் ஐந்திணைகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டவை ஆகும். கடவுள் வாழ்த்தையும் சேர்த்து 150 பாடல்கள் உள்ளன. பாலைக்கலி 35 பாடல்களையும், குறிஞ்சிக்கலி 29 பாடல்களையும், மருதக்கலி 35 பாடல்களையும், நெய்தற்கலி 33 பாடல்களையும், முல்லைக்கலி 17 பாடல்களையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு திணையும் ஒவ்வொரு புலவர்கள் பாடியுள்ளார்.

## அறக்கருத்துக்கள்

“அறம் என்ற சொல்லுக்குக் குடும்ப வாழ்வு, பொதுவாழ்வும் சீராக இயங்க ஒருவர் கடைபிடிக்கும் சமயச் சார்பான அல்லது ஒழுக்கக் கண்ணோட்டத்துடன் கூடிய நெறிமுறைகள் அல்லது கடமைகள்” என க்ரியா தமிழ் அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. கலித்தொகை அகம் சார்ந்த நூலாக இருந்தாலும், மக்களுக்கு அறிவு புகட்டும் அறக்கருத்துக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. அவை சிறந்த அறிவுரைகள் மட்டுமல்ல. உணர்வோர் உள்ளத்தில் ஓடாமல் ஊன்றி நிற்கக் கூடியவை.

### வாழும் நெறி

நெய்தற்கலி பாடல் ஒன்றில் கிடைத்தற்கரிய மனிதப்பிறவியில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைத் தெளிவாக நல்லந்துவனார் எடுத்துரைத்துள்ளார். இப்பாடல் பெரும்பாலான ஆசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இப்பாடலைப் பார்க்கும்பொழுது கலித்தொகை ஒரு அறநூலாக இருக்குமோ? ஏன்ற ஐயம் ஏற்படுகின்றது.

*1) ஆற்றுதல் என்பது இல்லற வாழ்க்கையில் வறுமை உற்றவர்க்கு உதவுதல் (2) போற்றுதல் என்பது நட்பாகக் கூடியவரைப் பிரியாதிருத்தல், (3) பண்பு எனப்படுவது உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதல் (4) அன்பு எனப்படுவது தன் சுற்றத்தாரிடம் சினம் கொள்ளாமல் இருத்தல் (5) அறிவு எனப்படுவது அறியாதார் தன்னைப் பார்த்துச் சொல்லும் சொல்லைப் பொறுத்துக்கொள்ளுதல் (6) செறிவு எனப்படுவது கூறிய ஒன்றைத் தான் என்றும் மறவாதிருத்தல் (7) முறை எனப்டுவது தீங்கு செய்தவர் நம்மவராக இருந்தாலும் அவர் குற்றத்திற்கேற்ப தண்டித்தல் (8) பொறை எனப்படுவது தன்னைப் பெறாதவரிடம் பகை கொள்ளாது, பொறுமையோடு இருத்தல் இவை எட்டும் ஒருவர் வாழ்வதற்கான நெறிமுறைகள் என நல்லந்துவனார் கூறியுள்ளார்.*

**"ஆற்றுதல்" என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**"போற்றுதல்" என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**"பண்பு" எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்**
**"அன்பு" எனப்படுவது தன்கிளை செறா அமை**
**"அறிவு" எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்**
**"செறிவு" எனப்படுவது கூறியது மறா அமை**
**"நிறை" எனப்படுவது மறைபிறர் அறியாமை**
**"முறை" எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்**
**"பொறை" எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்**

***(கலி. 133, பா. வரி: 6-13)***

### நல்வழியில் பொருள் ஈட்டல்

வாழ்க்கைக்குத் தேவையானப் பொருளைப் பிறருக்குத் துன்பம் தராத அறவழியில் சேர்க்க வேண்டும். ஒழுங்கு தவறிய நெறியிலே பொருள் சேர்ப்பவரிடம் அப்பொருள் நிலைத்திராது. இம்மையிலும் பகையாகி நின்று துன்பந்தரும். மறுமையிலும் பகையாக நின்று துயர் விளைவிக்கும் எனப் பெருங் கடுங்கோ கூறியுள்ளார். இதனை,

**"செம்மையின் இகழ்து ஓரீஇப்பொருள் செய்வார்க்கு அப்பொருள்**
**இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயே**

***(கலி. 14, பா. வரி 14-15)***

என்ற பாடல் மூலம் அறியலாம்.

### சுற்றம் பேணல்

நாம் மட்டும் நன்றாக வாழ வேண்டும் என்று எண்ணாமல் நம்முடைய உறவினர்களுக்குத் தேவையான உதவிகள் செய்ய வேண்டும். சுற்றத்தாரைப் பேணாதவனுடைய செல்வம் அழியும் விதத்தைப் பெருங்கடுங்கோ கீழ்க்கண்ட பாடலில் கூறியுள்ளார்.

**"கிளை அழிய வாழ்பவர் ஆக்கம் போல் புல்லென்**
**வளையானா நெகிழ்வு ஓடும் தோள்"**

***(கலி. 39, பா. வரி: 18-19)***

என்ற பாலைக்கலி பாடலில் சுற்றத்தார் துன்புறும்படி தான் மட்டும் இன்புற்று வாழ்கின்றவனுடைய செல்வம், தோள் இளைத்து வளையல் கழன்று ஓடுவதைப்போல் அழிந்துவிடும் என கூறியுள்ளார்.

சுற்றத்தாரைப் பேணாதவரின் செல்வம், நிலைக்காமல் திடீரென்று மறைந்து விடும். நீதியும் நேர்மையும் அற்ற செயல்களைச் செய்வது அஞ்சத்தக்கவை. பிறர் அஞ்சும்படியான தொழிலைச் செய்வது அறமாகாது. அச்செயலைச் செய்யாமல் இருப்பதே அறமாகும். இதனை

**"அஞ்சுவது அஞ்சா அறனிலி யல்லன் என்**
**நெஞ்சம் பணிக்கொண்டவர்"**

**(கலி. 42, பா. வரி: 26-27)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**"அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"**

**(குறள்: 428)**

என்ற திருக்குறள் கலித்தொகைப் பாடலை அப்படியே பிரதிபலிக்கின்றது.

## பிறருக்குத் தீங்கு செய்யாமை

பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணி உதவி செய்யாவிட்டால், அவன் தான் கற்ற கல்வியில் எந்தப் பயனும் இல்லை. தன்னுடைய உயிருக்குத் துன்பந்தரும் என அறிந்த ஒன்றை உலகிலுள்ள எந்த ஒரு உயிரினங்களுக்கும் செய்யக்கூடாது என கபிலர் வலியுறுத்துகின்றார். இதனை

**"தமக்கினி தென்று வலிதில் பிறர்கின்னா**
**செய்வ துநன்றாமோ மற்று"**

**(கலி. 62, பா. வரி: 7-8)**

என்ற பாடல்மூலம் அறியலாம்.

## சான்றோர் கடமை

நெய்தற்கலியில் சான்றோர்களுக்குரிய கடமை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**"பிறர் நோயும் தம் நோயும் போல் போற்றி**
**அறன் அறிதல்**
**சான்றவர்க் கெல்லாம் கடன்"**

**(கலி. 139, பா. வரி: 2-3)**

என்ற பாடலில் பிறருக்கு உண்டான துன்பத்தை நமக்கு உண்டான துன்பமாக எண்ணி அவர்களை அத்துன்பத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும். இவையே சான்றோரின் கடமை எனக் கூறப்பட்டுள்ளது. வள்ளுவரும் திருக்குறளில் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

**"அறிவினான் அருவ துண்டோ, பிறிதின் நோய்**
**தந்நோய் போல் போற்றாக்கடை"**

**(குறள்: 315)**

என்ற குறளில் பிற உயிர்களின் துன்பத்தைத் தனது துன்பமாக எண்ணி உதவி செய்ய வேண்டும். உதவி செய்யாவிட்டால்தான் பெற்ற அறிவினால் எந்தப் பயனும் இல்லை என்கிறார் வள்ளுவர்.

## மருத்துவர்க்குரிய அறம்

கலித்தொகையில் மருத்துவர்களுக்குரிய நெறிமுறைகளும் கூறப்பட்டுள்ளன.

**"மருந்து அறை கோடலில் கொடிதே யாடிநின்**
**அருந்தியோர் நெஞ்சம் அழித்து உகவிடினே"**

**(கலி. 129, பா.வரி: 24-25)**

என்ற பாடலில் ஒருவன் நோயால் வருந்த, அந்நோயைத் தீர்க்கும் மருந்தையும், அதனைத் தீர்க்கும் முறைகளையும் அறிந்த ஒருவன் அம்மருந்தை எனக்குத் தெரியாது என மறைத்தல் கூடாது. பிறருக்குப் பயன்படுமாறு கூறுதல் வேண்டும் என நல்லந்துவனார் வலியுறுத்துகிறார்.

## அரசனின் கடமை

அரசனுக்கு வேண்டிய இன்றியமையாப் பண்புகள் அன்பு, வாய்மை, நடுவுநிலைமை என்னும் மூன்றும் ஆகும். இது அரசனுக்கு மட்டுமின்றி உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டியப் பண்புகளாகும். இதனை

**"நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்**
**இவனின் தோன்றிய இவை என இரங்க**
**புரைதவ நாடி பொய் தபுத்து இனிது ஆண்ட**
**அரசனோடு உடன் மாய்ந்த நல்ஊழிச் செல்வம்"**

**(கலி. 130, பா. வரி: 1-4)**

என்ற நெய்தற்கலி பாடல் மூலம் அறியலாம்.

## ஈகை

பொருள் இல்லாமல் வறுமையில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு அவர் விரும்பும் ஒன்றைத் தருவதே ஈகை எனப்படும். ஈகையை விரும்பி தம்மிடம் பொருள் தா என்று இரப்பவர்களுக்கு, ஒன்றும் கொடுக்காமல் தாம் மட்டுமே

வைத்துக்கொண்டு உயிர்வாழ்வதைவிடச் சாவதே சிறந்ததாகும். ஆதலால் வறுமையில் வாட்டமுற்று வந்து இரப்போர்க்கு உதவி செய்ய வேண்டும் எனக் குறிஞ்சிக்கலியில் கூறப்பட்டுள்ளது. இதனை

**"ஈதல் இரந்தோர்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின்**
**சாதலும் கூடுமாம் மற்று"**

***(கலி. 61, பா. வரி: 11-12)***

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**"சாதலின் இன்னாத தில்லை இனித தூஉம்**
**ஈதல் இயையாக் கடை"**

***(குறள்: 230)***

என்ற திருக்குறள் இறத்தலைப் போன்று கொடுமையானது வேறெதுவுமில்லை. ஆனால் பிறர் தம்மிடம் பொருள் கேட்கும் போது இல்லை எனக் கூறுவது இறத்தலைவிடக் கொடுமையானது எனக் கூறுகின்றது.

### தேர்க்கொடை

சங்ககால மக்கள் தன்னைத் தேடிவரும் வறியவர்களுக்கு உணவு, யானை, பொன் போன்றவற்றைத் தானமாகக் கொடுத்தனர். குறிஞ்சி நிலத் தலைவன் தேரினைக் கொடையாக வழங்கிய செய்தி கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது.

**"தேர் ஈனும் வன் கையவன்"**

***(கலி. 42, பா. வரி: 21)***

### மகளிரின் கற்பு நெறி

மகளிர்க்குரிய பண்புகளுள் முதன்மையாக இடம் பெறுவது கற்பு ஆகும். சங்ககால மகளிர் கற்பு நெறியை உயர்ந்த அறமாகக் கொண்டிருந்தனர். குறிஞ்சி நில மகளிர் என்றும் பிழை செய்யார். அவர்கள் தத்தம் கணவரைத் தெய்வமாகத் தொழுது எழுவர். அவர்கள் கற்பு நெறியில் தவறாமல் இருந்ததால் அவர்களின் கணவன்மார்கள் குறி தப்பாது கணை தொடுக்கும் ஆற்றல் உடையவராய் விளங்கினர் *(கலி. 39, பா. வரி: 16-18).*

### காதல் அறம்

தமிழர்களின் திருமண முறை காந்தர்வ முறை ஆகும். அதாவது தலைவன் தலைவி ஒருவரை ஒருவர் காதலித்து மணம்புரிவது ஆகும். களவு காலத்தில் ஒருவரையொருவர் விரும்பிய தலைவன் தலைவியை மணம் முடித்து கொடுக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. விரும்பிய தலைமக்களைப் பிரித்து வேற்று மணம் புரிந்தால் வள்ளிக் கொடியில் வள்ளிக்கிழங்குகள் உண்டாகாது. மலைகளில் தேன் கூடுகள் உண்டாகாது. தினைகளில் கதிர்கள் உண்டாகாது என தோழி அறத்தோடு நின்றாள் (கலி. 39, பா. வரி: 12-14)

### முடிவுரை

எப்படியும் வாழலாம் என்று நினைக்கும் மக்களுக்கு இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒழுக்கத்தை வலியுறுத்தும் கலித்தொகை, நமக்குக் கிடைத்த அரிய அறிவுப் புதையலாகும்.